# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 2025 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கை மின்சார (திருத்தச்) சட்டம்

---

[2025 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 18 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2025, ஓகத்து மாதம் 22 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா. 100.00** **தபாற் செலவு : ரூபா. 150.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## 2025 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க,
## இலங்கை மின்சார (திருத்தச்) சட்டம்

[2025 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 18 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச.வ.-ஓ. 17/2025

## 2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

**1.** இச்சட்டம், 2025 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கை மின்சார (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்கச் சட்டத்துக்கான விரிவுப்பெயரைத் திருத்துதல்

**2.** (இதனகத்துப்பின்னர் “முதன்மைச் சட்டவாக்கம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டத்துக்கான விரிவுப்பெயர், “தேசிய மின்சார மதியுரைப் பேரவையைத் தாபிப்பதற்காக ஏற்பாடுசெய்வதற்கும்;” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “மின்வலுவின்மீதான தேசியக் கொள்கையின் பாகமாகத் தேசிய மின்சாரக் கொள்கைகளை வகுத்தமைப்பதற்காக ஏற்பாடுசெய்வதற்கும்;” என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத் திற்கான பொதுவான திருத்தம்

**3.** (1) முதன்மைச் சட்டவாக்கத்தில் பின்வருவன பதிலிடப்படுதல் வேண்டும்:-

(அ) “மொத்தவிற்பனை மின்சாரச் சந்தை” என்னும் சொல்லமைப்பு, 2 ஆம் பிரிவின் (இ) என்னும் பந்தியில், 29 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் மற்றும் 30 ஆம் பிரிவின் (1) ஆம், (2) ஆம் மற்றும் (4) ஆம் உட்பிரிவுகளில் தவிர, வேறு இடங்களில் எல்லாம் காணப்படுமிடத்து, அத்தகைய சொல்லமைப்புக்குப் பதிலாக, “தேசிய மின்சாரச் சந்தை” என்னும் சொல்லமைப்பை இடுதல்; அத்துடன்

(ஆ) “பேரவை” என்னும் சொல், 3 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட தேசிய மின்சார மதியுரைப் பேரவை என்பதற்கான குறிப்பீடு காணப்படும் இடங்களிலெல்லாம் அதற்குப் பதிலாக “அமைச்சரினால் நியமிக்கப்பட்ட குழு” என்னும் சொல்லமைப்பை இடுதல்.

(2) ஓராம் உட்பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு தவிர, முதன்மைச் சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளைப் பின்பற்றி வழங்கப்பட்ட ஏதேனும் அறிவித்தலில், அறிவிப்பில், ஒப்பந்தத்தில், தொடர்பாடலில் அல்லது வேறு ஆவணத்தில்-

(அ) "மொத்தவிற்பனை மின்சாரச் சந்தை" என்பதற்கான குறிப்பீடு ஒவ்வொன்றும் "தேசிய மின்சாரச் சந்தை" என்பதற்கானவொரு குறிப்பீடாக வாசித்துப் பொருளமைத்துக் கொள்ளப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட தேசிய மின்சார மதியுரைப் பேரவை தொடர்பிலான "பேரவை" என்பதற்கான குறிப்பீடு ஒவ்வொன்றும் "அமைச்சரினால் நியமிக்கப்பட்ட குழு" என்பதற்கானவொரு குறிப்பீடாக வாசித்துப் பொருளமைத்துக் கொள்ளப்படுதல் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 1 ஆம் பிரிவைத் திருத்துதல்

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 1 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவில் "4 ஆம் பிரிவின், 9 ஆம் பிரிவின்" என்னும் சொற்களும் எண்களும் காணப்படும் இடங்களி லெல்லாம், அச்சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "4 ஆம் பிரிவின், 5 ஆம் பிரிவின், 9 ஆம் பிரிவின்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில்-

(அ) அவ்வுட்பிரிவுக்கான முதலாம் காப்புவாசகத்தை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாகப் பின்வரும் காப்புவாசகத்தை இடுவதன்மூலமும்:-

"ஆயின், அத்தகைய கட்டளையை ஆக்கு முன்னர், அமைச்சர் பின்வருவன பற்றித் திருப்திப்படுதல் வேண்டும்:-

(அ) முதனிலைக் கைமாற்றல் திட்டம், மின்சக்தித்துறை சீர்திருத்தச் செயல கத்தினால் தயாரிக்கப்பட்டுள்ளதென்றும்;

(ஆ) தேசியக் காப்புவரிக் கொள்கையுட்பட மின்வலுவின் மீதான தேசியக்

கொள்கையின் பாகமாகத் தேசிய மின்சாரக் கொள்கை அமைச்சினால் தயாரிக்கப்பட்டு அமைச்சரவையினால் அங்கீகரிக்கப் பட்டுள்ளதென்றும்; அத்துடன்

(இ) தேசிய முறைமைத் தொழிற்படுத்துநரினால் தயாரிக்கப்பட்ட நீண்டகால மின்சக்தி முறைமை அபிவிருத்தித் திட்டம் பயனுக்கு வரும்வரை ஏற்புடையற்பாலனவாக இருக்கவேண்டிய வருடாந்த மின்சக்திப் பெறுகைத் திட்டமும் நீண்டகாலப் பிறப்பாக்க விசாலிப்புத் திட்டமும் நீண்டகால மின்கடத்துகை அபிவிருத்தித் திட்டமும் இலங்கை மின்சாரச் சபையினால் தயாரிக்கப்பட்டுள்ளனவென்றும்.";

(ஆ) அவ்வுட்பிரிவுக்கான இரண்டாம் காப்பு வாசகத்தை நீக்கிவிடுவதன்மூலமும்;

(3) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும்:-

"(ஆ) பிரிவு 30 இன் (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட மின்சாரச் சந்தை ஒவ்வொன்றும் 30 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் எத்தேதிகளிலிருந்து நடை முறைக்கு வருதல் வேண்டுமோ அத்தேதிகள்.";

(4) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில், "பாராளுமன்றத்தின் முன்னர் இடப்படுதல் வேண்டும்." என்னும் எல்லாச் சொற்களிலிருந்து அவ்வுட்பிரிவின் முடிவுவரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாகப் பின்வரும் சொற்களை இடுவதன்மூலமும்:-

"பாராளுமன்றத்தின் முன்னர் இடப்படுதல் வேண்டும்."; அத்துடன்

(5) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன்மூலமும்:-

"(6) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ் வாறிருப்பினும், அவ்வுட்பிரிவுக்கான காப்பு வாசகத் திலுள்ள தேவைப்பாடுகள் எதிர்கொள்ளப்பட்டுள்ளன வென அமைச்சர் திருப்திப்படுகின்றபோதிலும் அவ்வுட்பிரிவில் தேவைப்படுத்தப்பட்டவாறாக நியமிக்கப்பட்ட தேதியெதுவும் வர்த்தமானியில் வெளியிடப்படாதிருப்பின், இப்பிரிவின், 2 ஆம் பிரிவின், 3 ஆம் பிரிவின், 4 ஆம் பிரிவின், 5 ஆம் பிரிவின், 9 ஆம் பிரிவின், 10 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின், 10 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின், 10 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின், 10 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின், 14 ஆம் பிரிவின், 15 ஆம் பிரிவின், 17 ஆம் பிரிவின், 18 ஆம் பிரிவின், 38 ஆம் பிரிவின், 39 ஆம் பிரிவின் மற்றும் இப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட பிரிவுகளின் ஏற்பாடுகள் தவிர்ந்த இச்சட்டத்தின் ஏற்பாடுகள், இவ்வுட்பிரிவு எந்தத் தேதியன்று நடைமுறைக்கு வருகின்றதோ அத்தேதியிலிருந்து நான்கு மாதங்கள் முடிவுற்றதன்மேல் உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில், "மின்வழங்குகையின்" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "தொடர்ச்சியான மற்றும் நம்பகமான மின்வழங்குகையின்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அப்பிரிவின் (இ) என்னும் பந்தியில், "மொத்தவிற்பனை மின்சாரச் சந்தை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, தொகுதி யற்றனவாக்கப்பட்ட மின்சாரத்துறை மற்றும் தேசிய மின்சாரச் சந்தை" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(3) அப்பிரிவின் (எ) என்னும் பந்தியில், "சீராக்கப்பட்ட காப்பு நியமங்கள்மூலமும்" மற்றும் "எழுகின்ற அபாயங்களிலிருந்து"

என்னும் சொற்களுக்குப் பதிலாக, முறையே "அதிகரித்த காப்பு நியமங்களூடாகவும்" மற்றும் "இணைந்த ஆபத்துக்களிலிருந்து" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(4) அப்பிரிவின் (ஐ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும்:-

"(ஐ) புதுப்பிக்கத்தக்க மின்வலுவை மேம் படுத்தியும், இலங்கையின் தேசியக் கொள்கைகளுக்கு இசைவாக சுதேச வலுசக்தி வளங்களின் ஒருங்கிணைத்தலை அதியுச்சப்படுத்தியும், கரிமநீக்கத்துக்கான அரசாங்கத்தின் சர்வதேச உறுதிப் பாடுகளை எய்தும் நோக்கத்துடன் இலங்கையினது மின்சாரத்தொழிலின் கரியக் கால்த்தடத்தைக் குறைத்தல்.".

முதன்மைச் சட்டவாக்கத் தின் பாகம் II இன் தலைப்பை மாற்றீடு செய்தல்

**6.** முதன்மைச் சட்டவாக்கத்தின் பாகம் II இன் தலைப்பு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் தலைப்பு இடப்படுகின்றது:-

**"மின்வலு மீதான தேசியக் கொள்கையின் பாகமாகத் தேசிய மின்சாரக் கொள்கையும் கொள்கை வழிகாட்டு நெறிகளை வழங்குதலும்.".**

முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவை நீக்குதல்

**7.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவானது, இப்பிரிவு நடைமுறைக்குவரும் தேதிக்குமுன்னர், அப்பிரிவின்மூலம் தாபிக்கப்பட்ட தேசிய மின்சார மதியுரைப் பேரவையினால் 3 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி உரியமுறையில் செய்யப்பட்ட எவற்றுக்கும் பங்கமில்லாது இத்தால் நீக்கப் படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்

**8.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "அரசாங்கத்தின் கொள்கையையும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இலங்கையின் தேசிய வலுசக்திக் கொள்கை மற்றும் உத்திகளையும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன்மூலமும்:-

"(2) இப்பிரிவு நடைமுறைக்கு வருவதன்மேல், அமைச்சர், மின்சாரத் துக்கான அதிகரித்து வருகின்ற எதிர்காலக் கோரிக்கைகளை எதிர்கொள்வதற்கு இலங்கையை இயலச் செய்கின்ற நோக்குடன், ஒழுங்குபடுத்துநர், தேசிய முறைமைத் தொழிற்படுத்துநர், உரிமம்பெற்றவர்கள், பாவனையாளர் ஒழுங்கமைப்புகள் மற்றும் வேறு இயைபான அக்கறைகொண்டுள்ளோருடனான கலந்தா லோசனையின் பின்னரும், இயைபான எல்லாத் தேசியக் கொள்கைகளுக்கும் கொள்கை வழிகாட்டு நெறிகளுக்கும் இணங்கியொழுகவும், (இதனகத்துப் பின்னர் "அமைச்சரினால் நியமிக்கப்பட்ட குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பின்வரும் துறைகளுள் ஒன்றில் அல்லது அதற்கு மேற்பட்டவற்றில் ஆகக் குறைந்தது பதினைந்து ஆண்டுகால நிபுணத்துவத்தைக் கொண்டுள்ள எட்டுப் பேருக்கு மேற்படாதோரை உள்ளடக்கிய குழுவொன்றை, அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் மின்வலுபற்றிய தேசியக் கொள்கையின் ஒரு பாகமாக தேசிய மின்சாரக் கொள்கை வரைவை வகுத்தமைப்பதற்கென நியமித்தல் வேண்டும்:-

(அ) மின்வலுக் கொள்கை ஆக்குதல்;

(ஆ) பொருளியல்;

(இ) நிதி;

(ஈ) மின்வலு முறைமைத் திட்டமிடல்; அத்துடன்

(உ) புதுப்பிக்கத்தக்க மின்வலு மற்றும் மின்வலு இடைப்பெயர்வு.";

(2அ) ஆளொருவர்-

(i) இலங்கைப் பிரசையொருவராக இல்லாதிருப்பின் அல்லது இல்லா தொழிந்தால்;

(ii) நியமிக்கப்படுவதற்கு முன்னரான மூன்றாண்டுகளுக்குள் பாராளு மன்றத்தின், மாகாண சபை யொன்றின் அல்லது உள்ளூரதி காரசபையொன்றின் உறுப்பின ரொருவராக இருந்தால் அல்லது இருந்திருப்பின்;

(iii) மின்சாரத் தொழிலிலான ஏதேனும் உருவகத்தில் அல்லது அத்தகைய ஆளினால் புரியப்பட்ட ஏதேனும் கருமத்தில் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாது அக்கறை முரண்பாடொன்றாக அமைகின்ற ஏதேனும் நிதிசார் அல்லது வேறு அக்கறையொன்றைக் கொண்டுள்ள சம்பந்தப்பட்ட ஆளொருவராகவிருப்பின்;

(iv) இலங்கையில் வலுவிலுள்ள ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் சித்தசுவாதீனமற்றவராகக் கண்டறியப்படின் அல்லது வெளிப்படுத்தப்படின்;

(v) இலங்கையிலுள்ள அல்லது வேறே தேனும் நாட்டிலுள்ள ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் கடனிறுக்கவகையற்றவராக அல்லது வங்கிமுறிந்தவராக வெளிப்படுத்தப்பட்டுள்ளவரும் பொறுப்புவிடுவிக்கப்படாத கடனி றுக்கவகையற்றவராக அல்லது வங்கிமுறிந்தவராகவும் உள்ள ஆளொருவராக இருப்பின்;

(vi) இலங்கையிலுள்ள அல்லது வேறேதேனும் நாட்டிலுள்ள ஏதேனும் நீதிமன்றத்தினால் ஏதேனும் குற்றவியல் தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப் பளிக்கப்பட்டிருப்பின்; அல்லது

(vii) அமைச்சரினால் நியமிக்கப்பட்ட குழுவின் ஓர் உறுப்பினர் என்றவகையில் அத்தகைய ஆளுக்கு குறித்தளிக்கப்பட்ட பொறுப்புக்களை நிறை வேற்றுவதிலிருந்து அத்தகைய ஆளைத் தடைசெய்கின்ற ஏதேனும் உள அல்லது உடல் இயலாமைக்கு உட்பட்டவராக இருப்பின்,

அத்தகைய ஆள் அமைச்சரினால் நியமிக்கப் பட்ட குழுவின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதிலிருந்து அல்லது தொடர்ந்திருப்பதிலிருந்து தகைமை யற்றவராதல் வேண்டும்.

(2ஆ) அமைச்சர், (2அ) எனும் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தகைமையீனத்துக்கு அமைச்சரினால் நியமிக்கப்பட்ட குழுவின் எவரேனும் உறுப்பினர் உட்பட்டவராகவிருப்பின், அதற்கான காரணங்களை எழுத்தில் அமைச்சரவைக்கு அறிவித்த பின்னர், அத்தகைய உறுப்பினரை அகற்றுதல் வேண்டும்.

(2இ) அமைச்சரினால் நியமிக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்கள், அமைச்சரினால் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, மூன்றாண்டுகளைக்கொண்டவொரு காலப் பகுதிக்கு பதவிவகித்தல் வேண்டும்.

(2ஈ) அமைச்சர், எவரேனும் உறுப்பினரை மேலுமொரு மூன்றாண்டு பதவிக்காலத்துக்கு மீளநியமிக்கலாம்.";

(2உ) அமைச்சரால் நியமிக்கப்பட்ட குழு 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கருத் தெல்லையினுள்ளான அட்டவணை மயப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அச் சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்க பொருளமைத்துக் கொண்டிருத்தலும் வேண்டும்."

(3) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், "(2) ஆம் உட்பிரிவின்கீழ் அமைச்சரின் பணிப்புக்கு இணங்கியொழுகப் பின்வருவனமீது" என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக, "பின்வருவன மீது" என்னும் சொல்லை இடுவதன் மூலமும்;

(4) அப்பிரிவின் (9) ஆம் உட்பிரிவில், "உட்பிரிவுகள் (1) முதல் (7) வரையிலானவற்றில்" என்னும் சொற் களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "உட்பிரிவுகள் (4) முதல் (7) வரையிலானவற்றில்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(5) அப்பிரிவின் ஓரக்குறிப்பை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் ஓரக்குறிப்பை இடுவதன் மூலமும்:-

"மின்வலுமீதான தேசியக் கொள்கையின் பாகமாகத் தேசிய மின்சாரக் கொள்கையை வகுத்தமைத்தல்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்

**9.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (ஔ) என்னும் பந்தியில், "மிகக்குறைந்த ஆகுசெலவிலான சிக்கனமான அனுப்புகைக்கும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பாதுகாப்புத் தடைசெய்யப்பட்ட சிக்கனமான அனுப்புகைக்கும்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்

**10**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில்-

(அ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "அது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும்:- "என்னும் எல்லாச் சொற்களிலிருந்தும் அப்பந்தியின் முடிவுவரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாகப் பின்வரும் சொற்களை இடுவதன்மூலமும்:-

"அது பின்வரும் ஐந்து உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(i) அமைச்சில் ஒரு மேலதிகச் செயலாளர் அல்லது அதற்குச் சமமானவொரு பதவிக்குக் குறையாத பதவியொன்றை வகிக்கின்றவரும் அமைச்சரின் அவ்வமைச்சிலிருந்தானவருமான பிரதிநிதியொருவர்;

(ii) திறைசேரிப் பிரதிச் செயலாளரொருவர்;

(iii) மின்சக்தி முறைமைத் தொழிற்பாடு மற்றும் திட்டமிடலில் ஆகக்குறைந்தது பதினைந்தாண்டுகள் அனுபவத்தையேனும் கொண்டுள்ள ஆளொருவர்;

(iv) பெறுகையில் ஆகக்குறைந்தது பதினைந்தாண்டுகள் அனுபவத்தையேனும் கொண்டுள்ள ஆளொருவர்; அத்துடன்

(v) பின்வரும் துறைகளுள் ஏதேனுமொன்றில் அல்லது அதற்கு மேற்பட்டவற்றில் ஆகக்குறைந்தது பதினைந்தாண்டுகள் அனுபவத்தைக் கொண்டுள்ள ஆளொருவர்:-

அ. நிதி;

ஆ. பொருளியல்;

இ. கணக்கீடு; அல்லது

ஈ. வர்த்தக சட்டம்;

அத்துடன், இவர்களுள் ஒருவர் தவிசாளராக அமைச்சரினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.";

(ஆ) அவ்வுட்பிரிவின் (உ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளைச் சேர்ப்பதன்மூலமும்:-

"(ஊ) பணிப்பாளர் சபையுறுப்பினர்கள் அமைச்சரினால் பதவியிலிருந்து

அகற்றப்பட்டாலொழிய, மூன்றாண்டு காலப்பகுதியொன்றுக்கு பதவி வகித்தல் வேண்டும்.

(எ) அமைச்சர், எவரேனும் உறுப்பினரை மூன்றாண்டுகளைக் கொண்ட மேலதிகக் காலமொன்றுக்கு மீள நியமிக்கலாம்.";

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ், (அ) என்னும் பந்தியில் "இலங்கையின்" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "தொடர்ச்சியானதும் நம்பகமானதுமான மின்வழங்கலை உறுதிப்படுத்தி, இலங்கையின்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(3) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில், "இரண்டாண்டு களுக்கு ஒருதடவை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டினுள்ளும் அதன்பின்னர் இரண்டாண்டுகளுக்கு ஒரு தடவையும்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(4) அப்பிரிவின் (12) ஆம் உட்பிரிவில், "வழங்கப்படுகின்ற ஆட்களுடனும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "வழங்கப்படுகின்ற கம்பெனிகளுடனும்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(5) அப்பிரிவின் (14) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன்மூலமும்:-

"(15) தேசிய முறைமைத் தொழிற்படுத்துநர் 15 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் (ஏ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளுக்கிணங்க, மின்கட்டமைப்புக் கோவையையும் இலங்கையின் தேசிய மின் கட்டமைப்புத் தொடர்பான வேறு தொழினுட்ப மற்றும் தொழிற்பாடுசார் கோவைகளையும் நியமங்களையும் வரைதலும், நடைமுறைப்படுத்துதலும், பேணுதலும் வேண்டும்.".

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவைத் திருத்துதல்

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில்-

(அ) "(3) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட" என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக,

"(3) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றின்மூலம் குறித்துரைக் கப்பட்ட" என்னும் சொற்களையும் எண்ணையும் இடுவதன்மூலமும்;

(ஆ) அப்பந்தியின் (i) ஆம் உட்பந்தியில், "(3) ஆம் உட்பிரிவின்கீழ் குறித்துரைக்கப்பட்டவாறு" என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக, "(3) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றின்மூலம் குறித்துரைக்கப்பட்டவாறு" என்னும் சொற்களையும் எண்ணையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(இ) "ஒரு போட்டியுள்ள மற்றும் வெளிப்படையான பெறுகை நடைமுறையினைப் பின்பற்றிச் செய்யப்படுதல் வேண்டும்;" என்னும் சொற்கள் எல்லாவற்றிலிருந்தும் அப்பந்தியின் முடிவுவரையுள்ள எல்லாச் சொற்களையும் நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக "ஒரு போட்டியுள்ள மற்றும் வெளிப்படையான பெறுகை நடைமுறையினைப் பின்பற்றிச் செய்யப்படுதல் வேண்டும்;" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "அதன் மிக்க முற்கூட்டிய வசதிக்கேற்ப" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஏதேனும் விதப்புரை பெறப்பட்ட தேதியிலிருந்து முப்பது வேலைநாட்களினுள்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(3) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், "அமைச்சர், "என்னும் சொற்களிலிருந்து "கொள்ளளவைக் குறித்துரைக்கலாம்:" என்னும் சொற்கள் எல்லா வற்றுக்கும் பதிலாக, "அமைச்சர், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், 30 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்கத் தேசிய முறைமைத் தொழிற்படுத்துநருடனும் விநியோகிப்பு உரிமம் பெற்றவர்களுடனும் நியமப்படுத்தப்பட்ட மின்சக்திக் கொள்வனவு உடன்படிக்கைகளைச் செய்துகொள்வதற்கு அனுமதியளிக்கப்படக்கூடியவாறான ஒவ்வொரு புதுப்பிக்கத்தக்க மின்வலு தொழினுட்பவியல் அடிப்படையிலான அதிகபட்ச கொள்ளளவை,

அத்தகைய மின்சக்தி பொறித்தொகுதியுடன் நேரடியாக இணைந்துள்ள களஞ்சியப்படுத்துகை அல்லது துணைநிலைச் சேவைகளுடன் சேர்த்துக் குறித்துரைக்கலாம்:" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்; அத்துடன்

(4) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(4) ஆகக்குறைந்த ஆகுசெலவில் எவரேனு மாளினால் வழங்கப்படுவதற்குத் தேவைப் படுத்தப்பட்ட அவசரக் கொள்ளளவைப் பெறுகின்றமையின் இயல்திற நன்மை இழுபட்ட விலைகூறலைக் கோருகின்ற செய்முறையை விஞ்சுமிடத்து, ஒரு தேசிய இடர்நிலைமையின்போது அல்லது ஒரு பாரிய மின் பிறப்பாக்கற்பொறித்தொகுதியின் நீண்டகாலக் கட்டாயச் செயலிழப்பின் போது, அமைச்சரவையினால் தீர்மானிக்கப்பட்ட வாறு ஏதேனும் அவசர நிலைமையை எதிர்கொள்வதற்கு ஏதேனும் புதிய மின்பிறப்பாக்கற் பொறித்தொகுதியைப் பெறுகைசெய்தல் தொடர்பில் அல்லது ஏலவேயுள்ள ஏதேனும் மின்பிறப்பாக்கற் பொறித்தொகுதியை விசாலித்தல் தொடர்பில் ஒரு கேள்விப்பத்திரமொன்றை சமர்ப்பிப்பதற்கான தேவைப்பாடுகளை தேசிய முறைமைத் தொழிற்படுத்துநர் விட்டுவிடலாம்.

(5) ஒரு கேள்விப்பத்திரமொன்றைச் சமர்ப் பிக்காமல் மின்பிறப்பாக்கற் பொறித் தொகுதிகளிலிருந்து அவசரகால மின்சக்திக் கொள்வனவின் அத்தகைய காலப்பகுதியானது, அவசரகால நிலைமை ஓராண்டுக்கு மேற்பட உள்ளமையினால் தேவைப்படுத்தப்பட்டவாறு அமைச் சரவையின் முன்னங்கீகாரமொன்று பெற்றுக்கொள்ளப்பட்டாலொழிய, அமைச் சரவையின் இயைபான தீர்மானத்திலிருந்து ஓராண்டுக்காப்பால் நீடித்தலாகாது.

(6) முப்பதாம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டவொரு கட்டளையின்மூலம் குறித்துரைக்கப் பட்டவாறாக போட்டியுள்ள துணைச் சேவை சந்தையானது தொழிற்பாடுகளைத் தொடங்குகின்ற தேதியன்றும் அதன் பின்னரும் (4) ஆம், (5) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் நடைமுறையில் இல்லாதொழிதல் வேண்டும்.”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துதல்

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், “ஐம்பது சதவீதத்துக்கு மேற்பட்ட” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “நூறு சதவீதம்” என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், “வழங்கப்பட்டுள்ள வரான எவரேனும் ஆள்” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “வழங்கப்பட்டுள்ள 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் நியதிகளின் படி கூட்டிணைக்கப்பட்டதுமான ஏதேனும் கம்பெனி,” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(3) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், “வழங்கப் பட்டுள்ளவரான ஆளொருவருக்கு” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “வழங்கப்பட்டுள்ளதான கம்பெனியொன்றுக்கு” என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துதல்

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் –

(அ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், "கைமாற்றல் திட்டத்திற்றரப்பட்டுள்ள" மற்றும் "கூட்டிணைக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட கம்பெனிகளுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, முறையே "முதனிலைக் கைமாற்றல் திட்டத்திற்றரப்பட்டுள்ள" மற்றும் "கூட்டிணைக் கப்பட்ட அட்டவணை I றின் விடயங்கள் (அ), (உ), (ஊ), (எ), (ஏ)(i) மற்றும் (ஏ)(ii) என்பவற்றில்

குறிப்பீடுசெய்யப்பட்ட வரையறுக்கப்பட்ட கம்பெனிகளுக்கு" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(ஆ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன்மூலமும்:-

"(அஅ) பதினெட்டாம் பிரிவில் குறித்துரைக்கப் பட்டவாறான இறுதிக் கைமாற்றல் திட்டத்தை வர்த்தமானியில் வெளியிடு கின்ற தேதியிலிருந்து ஓராண்டுக் காலப்பகுதியினுள் அட்டவணை I யின் விடயங்கள் (அ) மற்றும் (எ) என்பவற்றில் குறிப்பீடுசெய்யப்பட்ட கம்பெனிகளின் செயற்பாடுகளும் எல்லாச் சொத்துக்களும் பொறுப்பு களும், அவற்றின் முறையான கடமை களுடனும் பணிகளுடனும் சேர்த்து, இறுதிக் கைமாற்றல் திட்டத்தினால் வடிவமைக்கப்பட்டவாறு மேலும் தொகுதியற்றவாதல் வேண்டுமென் பதுடன் (1) ஆம் உட்பிரிவின் நியதி களின்படி கூட்டிணைக்கப்பட்ட அட்டவணை I றின் விடயங்கள் (ஐ) (i) மற்றும் (ஐ)(ii) இல் குறிப்பீடு செய்யப்பட்ட வரையறுக்கப்பட்ட கம்பெனிகளுக்கு உரித்தாக்கப் படுதலும் வேண்டும்.";

(இ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:-

"(ஆ) திறைசேரிச் செயலாளருக்கு, அட்டவணை I றின் விடயங்கள் (அ), (உ), (ஊ), (எ) மற்றும் (ஏ)(ii) என்பவற்றிலும் நீரியல் மின்சக்திப் பிறப்பாக்கம் தொடர்பில் அட்டவணை (I) றின் விடயம் (ஐ)(i) இல்

குறிப்பீடு செய்யப்பட்டுள்ள கம்பெனி என்பவற்றில் குறிப்பீடுசெய்யப்பட்ட கம்பெனிகள் தவிர்ந்த இப்பிரிவின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட அடுத்துறும் கம்பெனி களிலான பங்குகளின் நூறு சதவீதம் ஆரம்பத்தில் பங்கீடுசெய்யப்படுதல் வேண்டும், அதில் திறைசேரிச் செயலாளருக்குப் பங்குகளின் நூறு சதவீதம் நிரந்தரமாகப் பங்கீடுசெய்யப்படுதல் வேண்டும்."; அத்துடன்

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(4) அட்டவணை I றின் விடயம் (அ) வில் குறிப்பீடுசெய்யப்பட்ட கம்பெனியின் அலுவல் களை நிருவகித்தலும் முகாமைசெய்தலும் பின்வரும் ஐந்து உறுப்பினர்களைக் கொண்டிருக்கவேண்டிய அமைச்சரினால் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் சபையொன்றுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்:-

(அ) அமைச்சில் மேலதிகச் செயலாளர் ஒருவர்அல்லதுஅதற்குச்சமமானவொரு பதவிக்குக் குறையாதவொரு பதவியை வகிக்கின்றவரும் அமைச்சரின் அவ் வமைச்சிலிருந்தானவருமான பிரதிநிதி ஒருவர்;

(ஆ) திறைசேரிப்பிரதிச் செயலாளர் ஒருவர்;

(இ) மின்சாரப் பிறப்பாக்க முறைமைகள் பற்றிய முகாமைத்துவத்தில் ஆகக் குறைந்தது பதினைந்தாண்டுகள் அனுபவத்தையேனும் கொண்டுள்ள ஆளொருவர்;

(ஈ) பெறுகையில் ஆகக்குறைந்தது பதினைந்தாண்டுகள் அனுபவத்தை யேனும் கொண்டுள்ள ஆளொருவர்;

(உ) பின்வரும் துறைகளுள் ஏதேனு மொன்றில் அல்லது அதற்கு மேற் பட்டவற்றில் ஆகக்குறைந்தது பதினைந்தாண்டுகள் அனுபவத்தைக் கொண்டுள்ள ஆளொருவர்:-

(i) நிதிசார் முகாமைத்துவம்;
(ii) பொருளியல்;
(iii) கணக்கீடு; அல்லது
(iv) வர்த்தகச் சட்டம்,

அத்துடன், அவர்களுள் ஒருவர் அமைச்சரினால் தவிசாளராக நியமிக்கப்படுதல் வேண்டும்.

(5) அட்டவணை I றின் விடயம் (உ) வில் குறிப்பீடுசெய்யப்பட்ட கம்பெனியின் அலுவல் களை நிருவகித்தலும் முகாமைசெய்தலும் பின்வரும் ஐந்து உறுப்பினர்களைக் கொண்டிருக்கவேண்டிய அமைச்சரினால் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் சபையொன்றுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்:-

(அ) அமைச்சில் மேலதிகச் செயலாளர் ஒருவர்அல்லதுஅதற்குச்சமமானவொரு பதவிக்குக் குறையாதவொரு பதவியை வகிக்கின்றவரும் அமைச்சரின் அவ் வமைச்சிலிருந்தானவருமான பிரதிநிதி ஒருவர்;

(ஆ) திறைசேரி பிரதிச் செயலாளர் ஒருவர்;

(இ) மின்சாரக் கடத்துகை முறைமைகள் பற்றிய முகாமைத்துவத்தில் ஆகக் குறைந்தது பதினைந்தாண்டுகள் அனுபவத்தையேனும் கொண்டுள்ள ஆளொருவர்;

(ஈ) பெறுகையில் ஆகக்குறைந்தது பதினைந்தாண்டுகள் அனுபவத்தை யேனும் கொண்டுள்ள ஆளொருவர்;

(உ) பின்வரும் துறைகளுள் ஏதேனுமொன்றில் அல்லது அதற்கு மேற்பட்டவற்றில் ஆகக்குறைந்தது பதினைந்தாண்டுகள் அனுபவத்தைக் கொண்டுள்ள ஆளொருவர்:-

(i) நிதிசார் முகாமைத்துவம்;
(ii) பொருளியல்;
(iii) கணக்கீடு; அல்லது
(iv) வர்த்தகச் சட்டம்,

அத்துடன், அவர்களுள் ஒருவர் அமைச்சரினால் தவிசாளராக நியமிக்கப்படுதல் வேண்டும்.

(6) அட்டவணை I றின் விடயம் (எ) வில் குறிப்பீடுசெய்யப்பட்ட கம்பெனியின் அலுவல்களை நிருவகித்தலும் முகாமைசெய்தலும் பின்வரும் ஐந்து உறுப்பினர்களைக் கொண்டிருக்கவேண்டிய அமைச்சரினால் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் சபையொன்றுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்:-

(அ) அமைச்சில் மேலதிகச் செயலாளர் ஒருவர் அல்லது அதற்குச் சமமானவொரு பதவிக்குக் குறையாதவொரு பதவியை வகிக்கின்றவரும் அமைச்சரின் அவ்வமைச்சிலிருந்தானவருமான பிரதிநிதி ஒருவர்;

(ஆ) திறைசேரி பிரதிச் செயலாளர் ஒருவர்;

(இ) மின்சார விநியோகிப்பு முறைமைகள் பற்றிய முகாமைத்துவத்தில் ஆகக் குறைந்தது பதினைந்தாண்டுகள் அனுபவத்தையேனும் கொண்டுள்ள ஆளொருவர்;

(ஈ) பெறுகையில் ஆகக்குறைந்தது பதினைந்தாண்டுகள் அனுபவத்தையேனும் கொண்டுள்ள ஆளொருவர்;

(உ) பின்வரும் துறைகளுள் ஏதேனுமொன்றில் அல்லது அதற்கு மேற்பட்டவற்றில் ஆகக்குறைந்தது

பதினைந்தாண்டுகள் அனுபவத்தைக் கொண்டுள்ள ஆளொருவர்:-

(i) நிதிசார் முகாமைத்துவம்;
(ii) பொருளியல்;
(iii) கணக்கீடு; அல்லது
(iv) வர்த்தகச் சட்டம்,

அத்துடன், அவர்களுள் ஒருவர் அமைச்சரினால் தவிசாளராக நியமிக்கப்படுதல் வேண்டும்.

(7) அட்டவணை I றின் விடயம் (ஏ)(i) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட கம்பெனியின் அலுவல்களை நிருவகித்தலும் முகாமைசெய்தலும் பின்வரும் ஐந்து உறுப்பினர்களைக் கொண்டிருக்கவேண்டிய அமைச்சரினால் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் சபையொன்றுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்:-

(அ) அமைச்சில் மேலதிகச் செயலாளர் ஒருவர் அல்லது அதற்குச் சமமானவொரு பதவிக்குக் குறையாதவொரு பதவியை வகிக்கின்றவரும் அமைச்சரின் அவ்வமைச்சிலிருந்தானவருமான பிரதிநிதி ஒருவர்;

(ஆ) திறைசேரிப் பிரதிச் செயலாளர் ஒருவர்;

(இ) மின்சாரத்துறை இணைப்பு முகாமைத்துவத்தில் ஆகக் குறைந்தது பதினைந்தாண்டுகள் அனுபவத்தைக் கொண்டுள்ள ஒரு ஆள்;

(ஈ) மின்பெறுகையில் ஆகக்குறைந்தது பதினைந்தாண்டுகள் அனுபவத்தைக் கொண்டுள்ள ஒரு ஆள்;

(உ) பின்வரும் துறைகளுள் ஏதேனுமொன்றில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றில் ஆகக்குறைந்தது பதினைந்தாண்டுகள் அனுபவத்தைக் கொண்டுள்ள ஒரு ஆள்:-

(i) நிதிசார் முகாமைத்துவம்;
(ii) பொருளியல்;
(iii) கணக்கீடு; அல்லது
(iv) வர்த்தகச் சட்டம்,

அத்துடன், அவர்களுள் ஒருவர் அமைச்சரினால் தவிசாளராக நியமிக்கப்படுதல் வேண்டும்.

(8) அட்டவணை I றின் விடயம் (ஏ)(ii) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட கம்பெனியின் அலுவல்களை நிருவகித்தலும் முகாமைசெய்தலும் பின்வரும் ஒன்பது உறுப்பினர்களைக் கொண்டிருக்கவேண்டிய அமைச்சரினால் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் சபையொன்றுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்:-

(அ) அமைச்சில் மேலதிகச் செயலாளர் ஒருவர் அல்லது அதற்குச் சமமானவொரு பதவிக்குக் குறையாதவொரு பதவியை வகிக்கின்றவரும் அமைச்சரின் அவ் வமைச்சிலிருந்தானவருமான பிரதிநிதி ஒருவர்;

(ஆ) பிரதித் திறைசேரிச் செயலாளர் ஒருவர்;

(இ) பின்வரும் துறைகளுள் ஏதேனு மொன்றில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றில் ஆகக்குறைந்தது பதினைந்தாண்டுகள் அனுபவத்தைக் கொண்டுள்ள ஆட்கள் மூவர்:-

(i) நிதிசார் முகாமைத்துவம்;
(ii) பொருளியல்;
(iii) கணக்கீடு; அல்லது
(iv) வர்த்தகச் சட்டம்,

(ஈ) நியமிக்கப்பட்ட தேதிக்கு முற்போந்த நாளன்று இலங்கை மின்சாரச் சபையில் சேவையாற்றுகின்ற ஊழியர்களினதும்

இலங்கை மின்சாரச் சபையின் முன்னாள் ஊழியர்களிலுமிருந்தும் நான்கு ஆட்கள்,

அத்துடன், அவர்களுள் ஒருவர் அமைச்சரினால் தவிசாளராக நியமிக்கப்படுதல் வேண்டும்.

(9) (அ) தவிசாளருட்பட, (4) ஆம், (5) ஆம், (6) ஆம், (7) ஆம் மற்றும் (8) ஆம் உட்பிரிவுகளில் குறிப்பீடுசெய்யப்பட்ட கம்பெனிகளின் பணிப்பாளர் சபைகளினது உறுப்பினர்கள், அமைச்சரினால் பதவியிலிருந்து அகற்றப் பட்டாலொழிய, மூன்றாண்டுகளைக்கொண்ட காலப்பகுதியொன்றுக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(ஆ) தவிசாளராக நியமிக்கப்பட்ட உறுப் பினருட்பட, அத்தகைய எவரேனும் உறுப்பினரை, அமைச்சர், மூன்றாண்டு களைக்கொண்ட மேலதிகக் காலமொன்றுக்கு மீளநியமிக்கலாம்.

(இ) உட்பிரிவுகள் (4), (5), (6), (7) மற்றும் (8) என்பவற்றிலும் அட்டவணை I இன் (ஐ)(i) மற்றும் (ஐ)(ii) ஆகிய விடயங்களில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள கம்பெனிகளிலும் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள கம்பெனிகளின் பணிப்பாளர் சபையானது, பணிப்பாளர்கள் சபையின் பணிப்பாளரொருவராக பதவியேற்பதற்கு முன்னர் நியமனத் தேதியன்றுள்ளவாறு அவர்களின் அக்கறைகள் பற்றிய பொதுவான வெளிகாட்டுகையொன்றை அமைச்சருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஈ) பணிப்பாளர் சபையின் முன்னர் எடுக்கப்பட வுள்ள ஏதேனும் கருமத்தில் நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ ஏதேனும் அக்கறைக் கொண்டுள்ள உட்பிரிவுகள் (4), (5), (6), (7) மற்றும் (8) என்பவற்றிலும் அட்டவணை I இன் (ஐ)(i) மற்றும் (ஐ)(ii) ஆகிய விடயங்களில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள கம்பெனிகளிலும் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள கம்பெனிகளின் எவரேனும் பணிப்பாளர், பணிப்பாளர் சபைக்கு

அத்தகைய அக்கறையின் தன்மையினை வெளிக்காட்டுதல் வேண்டுமென்பதுடன் அக்கருமம் தொடர்பாக பணிப்பாளர் சபையின் ஏதேனும் கலந்தாராய்வில் அல்லது முடிபில் பங்குபற்றுதலுமாகாது.

(உ) அமைச்சரின் அமைச்சிலிருந்து அல்லது திறைசேரியிலிருந்தானவாறான பிரதிநிதியொருவர் தவிர்ந்த எவரேனுமாள் அட்டவணை I இன் (அ), (உ), (ஊ), (எ), (ஏ)(i), (ஐ)(i) மற்றும் (ஐ)(ii) ஆகிய விடயங்களில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள கம்பெனிகளின் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பணிப்பாளர் சபைகளின் உறுப்பின ரொருவராக நியமிக்கப்படுதலாகாது.

(10) உட்பிரிவுகள் (4), (5), (6), (7) மற்றும் (8) என்பவற்றில் குறிப்பீடுசெய்யப்பட்ட கம்பெனி களின் பணிப்பாளர் சபைகள்-

(அ) காலத்துக்குக்காலம் பின்வரும் கொள்கைகளின் வரைவை வகுத்தமைத்தல் வேண்டும்:-

(i) தொழில்முயற்சி முகாமைத்துவக் கொள்கை;

(ii) முதலீட்டு மற்றும் பெறுகைக் கொள்கை;

(iii) தொழில்முயற்சி ஆபத்து முகாமைத்துவக் கொள்கை;

(iv) நிதிசார் முகாமைத்துவக் கொள்கை;

(v) வெளிக்காட்டுகைக் கொள்கை;

(vi) ஊழல் எதிர்ப்புக் கொள்கை;

(vii) மனித வளங்கள் கொள்கை;

(viii) மூலோபாயஞ்சார் தொடர் பாடல்கள் கொள்கை;

(ஆ) அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு வரைவுக்

கொள்கைகளை அமைச்சருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்; அத்துடன்

(இ) வரைவுக் கொள்கைகளுக்கு அமைச்சரவையினால் அங்கீகாரம் அளிக்கப்படுவதன்மேல், கம்பெனியின் அலுவல்களினது நிருவாகமும் முகாமையும்மீதான எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அத்தகைய கொள்கைகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.".

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவைத் திருத்துதல்

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் -

(அ) பந்தி (ஆ) வில் "இரண்டாண்டுகளுக்குப் பிந்தாமல்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஒரு ஆண்டினைப் பிந்தாமல்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) பந்தி (இ) இல் -

(i) "அட்டவணை I இன் (அ), (ஊ) மற்றும் (ஏ)(ii) என்னும் விடயங்களில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அட்டவணை I இன் (அ), (உ), (ஊ), (எ) மற்றும் (ஏ)(ii) என்னும் விடயங்களில்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்".

(ii) "பந்தி (ஆ) இன் நியதிகளின்படி" இலிருந்து இறுதி வரையிலுமான எல்லா சொற்களுக்குப் பதிலாக, "பந்தி (ஆ) இன் நியதிகளின்படி", "அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் -

(அ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும்:-

"(ஆ) வழங்குநர் பொறுப்புக்கள் உள்ளடங்கலாக, இலங்கை மின்சாரசபையின் ஏலவேயுள்ள நிதிசார் பொறுப்புக்கள் அடுத்துறும் கம்பெனிகளுக்கிடையே எந்த விகிதாசாரங்களைக் குறித்தொதுக்கப்படுதல் வேண்டுமோ அந்த விகிதாசாரங்களைக் குறித்துரைத்தல் வேண்டும்;";

(ஆ) அவ்வுட்பிரிவின் (உ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில் "சகாய நிதியக் கடப்பாடுகளை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "சகாய நிதியம் மற்றும் ஓய்வூதிய நிதியக் கடப்பாடுகளை" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(இ) அவ்வுட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியில், "இப்பிரிவு நடைமுறைக்கு வருவதிலிருந்து நான்கு மாதங்களினுள்" என்னும் சொற்கள் அப்பந்தியில் காணப்படும் இடங்களில் எல்லாம், "இப்பிரிவு நடைமுறைக்கு வருவதிலிருந்து பதினான்கு மாதங்களினுள்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;".

(ஈ) இவ்வுட்பிரிவின் (எ) என்னும் பந்தியில், "17 ஆம் பிரிவு" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "17 ஆம் பிரிவு" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(உ) அவ்வுட்பிரிவின் (எ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(ஏ) வர்த்தமானியில் கடைசி மைாற்றல் திட்டம் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து ஒரு வருடத்துக்கு முற்போந்த நாளன்று பிறப்பாக்கக் கம்பெனியில் பதவி வகிக்கின்ற (இப்பந்தியில் "பிறப்பாக்கக் கம்பெனி" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) அட்டவணை I றின் (அ) என்னும் விடயத்தில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள பிறப்பாக்கக் கம்பெனியின் எல்லா அலுவலர்களும் சேவையாளர்களும் -

(i) பிறப்பாக்கக் கம்பெனியினால் முறையாக அடையாளங் காணப்படுதல் வேண்டும்;

(ii) வர்த்தமானியில் கடைசி கைமாற்றல் திட்டம் வெளியிடப் பட்ட தேதியிலிருந்து நான்கு மாதங்களினுள் அட்டவணை I றின் (ஐ)(i) என்னும் விடயத்தில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள முறையான அடுத்துறும் கம்பெனிகளுக்கு அவற்றின் உத் தேசிக்கப்பட்ட குறித்தளிப்புப் பற்றி பிறப்பாக்கக் கம்பெனி யால் அறிவிக்கப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(iii) அட்டவணை I றின் (ஐ)(i) என்னும் விடயத்தில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முறையான அடுத்துறும் கம்பெனிகளுக்குக் குறித்தளிக்கப்படுவதற்கு அவர்கள் விருப்புத் தெரிவிக் கின்றனரா அல்லது இல்லையா வென உட்பந்தி (ii) இல் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள அறிவித்தல் பெறப்பட்ட திலிருந்து இரண்டு மாதங்களி னுள் பிறப்பாக்கக் கம்பெனிக்கு அறிவிக்கும்படி தேவைப்படுத் தப்படுதல் வேண்டும்,

என உறுதிப்படுத்தல் வேண்டு மென்பதுடன் வர்த்தமானியில் கடைசி கைமாற்றல் திட்டம் வெளியிடப்படு கின்ற தேதியிலிருந்தது ஒரு ஆண்டினை அத்துறும் தேதியிலிருந்து பயனுறுவதாக இலங்கை மின்சாரச் சபையுடனான அவர்களின் தொழில் ஒப்பந்தத்தின்கீழ் நியமிக்கப்பட்ட தேதிக்கு முற்போந்த நாளன்று அவர் களினால் துய்க்கப்பட்டவற்றைப் பார்க்கிலும் அனுகூலம் குறைந்தவை யாகவிராத நியதிநிபந்தனைகளின் மீது கடைசி கைமாற்றல்

திட்டத்தின் கீழான அட்டவணை I றின் (ஐ)(i) என்னும் விடயத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய அடுத்துறும் கம்பெனிகளுக்குக் குறித்தளிக்கப்படுதலும் வேண்டும். ஊழியரொருவர் கடைசி கைமாற்றல் திட்டத்தின் கீழான அட்டவணை I றின் (ஐ)(i) என்னும் விடயத்தில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள அடுத்துறும் கம்பெனியொன்றுக்குக் குறித்தளிக் கப்படுவதற்கு விருப்புத் தெரிவிக்காத விடத்து, அத்தகைய ஊழியர் தன்னிச்சையான இளைப்பாற்றுத் திட்டமொன்றுக்கு உரித்துடைய வராதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய திட்டத்தின் நியதி நிபந்தனைகள் வர்த்தமானியில் கடைசி கைமாற்றல் திட்டம் வெளி யிடப்படுகின்ற தேதியிலிருந்து நான்கு மாதங்களினுள் விதித்துரைக்கப்படு தல் வேண்டும் ; அத்துடன்

(ஐ) வர்த்தமானியில் கடைசி மைமாற்றல் திட்டம் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து ஒரு வருடத்துக்கு முற்போந்த நாளன்று விநியோகிப்புக் கம்பெனியில் பதவி வகிக்கின்ற (இப்பந்தியில் “விநியோகிப்புக் கம்பெனி” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) அட்டவணை I றின் (எ) என்னும் விடயத்தில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள விநியோகிப்புக் கம்பெனியின் எல்லா அலுவலர்களும் சேவையாளர்களும் -

(i) விநியோகிப்புக் கம்பெனியினால் முறையாக அடையாளங் காணப்படுதல் வேண்டுமென;

(ii) வர்த்தமானியில் கடைசி கைமாற்றல் திட்டம் வெளியிடப் பட்ட தேதியிலிருந்து நான்கு மாதங்களினுள் அட்டவணை I றின் (ஐ)(i) என்னும் விடயத்தில் குறிப்பீடு

செய்யப்பட்டுள்ள முறையான அடுத்துறும் கம்பெனிகளுக்கு அவற்றின் உத்தேசிக்கப்பட்ட குறித்தளிப்புப்பற்றி விநியோகிப்புக் கம்பெனியால் அறிவிக்கப் படுதல் வேண்டுமென ; அத்துடன்

(iii) அட்டவணை I றின் (ஐ)(ii) என்னும் விடயத்தில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முறையான அடுத்துறும் கம்பெனிகளுக்குக் குறித்தளிக்கப்படுவதற்கு அவர்கள் விருப்புத் தெரிவிக்கின்றனரா அல்லது இல்லையாவென உட்பந்தி (ii) இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள அறிவித்தல் பெறப்பட்டதிலிருந்து இரண்டு மாதங்களினுள் விநியோகிப்புக் கம்பெனிக்கு அறிவிக்கும்படி தேவைப்படுத்தப்படுதல் வேண்டும் உறுதிப்படுத்தல் வேண்டுமென,

உறுதிப்படுத்தல் வேண்டுமென்பதுடன் வர்த்தமானியில் கடைசி கைமாற்றல் திட்டம் வெளியிடப்படுகின்ற தேதியிலிருந்து ஒரு வருடத்தை அடுத்துறுகின்ற தேதியிலிருந்து பயனுறுவதாக இலங்கை மின்சார சபையுடனான அவர்களின் தொழில் ஒப்பந்தத்தின்கீழ் நியமிக்கப்பட்ட தேதிக்கு முற்போந்த நாளன்று அவர்களினால் துய்க்கப்பட்டவற்றைப் பார்க்கிலும் அனுகூலம் குறைந்தவையாகவிராத நியதி நிபந்தனைகளின்மீது கடைசி கைமாற்றல் திட்டத்தின் அட்டவணை I றின் (ஐ)(ii) என்னும் விடயத்தில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள அத்தகைய அடுத்துறும் கம்பெனிகளுக்குக் குறித்தளிக்கப்படுதல் வேண்டும். ஊழியரொருவர் கடைசி கைமாற்றல் திட்டத்தின் அட்டவணை

I றின் (ஐ)(ii) என்னும் விடயத்தில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள அடுத்துறும் கம்பெனியொன்றுக்குக் குறித்தளிக்கப்படுவதற்கு விருப்புத் தெரிவிக்காதவிடத்து, அத்தகைய ஊழியர் தன்னிச்சையான இளைப் பாற்றுத் திட்டமொன்றுக்கு உரித் துடையவராதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய திட்டத்தின் நியதி நிபந்தனைகள் வர்த்தமானியில் கடைசி கைமாற்றல் திட்டம் வெளியிடப்படுகின்ற தேதியி லிருந்து நான்கு மாதங்களினுள் விதித்துரைக்கப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவைத் திருத்துதல்

**15.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும்:-

"(3) (அ) இரண்டாயிரத்தேழாம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்டதும், இலங்கை அரசாங்கம்-

(i) அதன் பங்குகளில் நூறு சதவீதத்தை வைத்திருக்கின்றதுமானவொரு வரையறுக் கப்பட்ட கம்பெனி மட்டுமே தேசிய முறைமைத் தொழிற்படுத்துநர் உரிமத்தின் வழங்குகைக்காக விண்ணப்பிப்பதற்குத் தகவுடையதாதல் வேண்டும்;

(ii) அதன் பங்குகளில் நூறு சதவீதத்தை வைத்திருக்கின்றதுமானவொரு வரையறுக் கப்பட்ட கம்பெனி மட்டுமே தேசிய மின்கடத்துகை வரையமைப்புச் சேவை வழங்குநர் உரிமத்தின் வழங்குகைக்காக விண்ணப்பிப்பதற்குத் தகவுடையதாதல் வேண்டும்.

(ஆ) ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, இத்தால் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றது:-

(i) இச்சட்டத்தின்கீழ் அளிக்கப்பட்ட ஒரு தேசிய முறைமைத் தொழிற்படுத்துநர் உரிமம் மட்டுமே இருத்தல் வேண்டு மெனவும்; அத்துடன்

(ii) இச்சட்டத்தின்கீழ் அளிக்கப்பட்ட ஒரு தேசிய மின்கடத்துகை வலையமைப்புச் சேவை வழங்குநர் உரிமம் மட்டுமே இருத்தல் வேண்டுமென்றும்.".

(2) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில், "எவரேனும் ஆளுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட ஏதேனும் கம்பெனிக்கு" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்; அத்துடன்

(3) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன்மூலமும்:-

"(6) (அ) நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல், தனியொரு கம்பெனியின் பங்குகளினது ஐந்து சதவீதத்திற்கு மேற்பட்டதை வைத்திருக்கின்ற, இலங்கை அரசாங்கம் தவிர்ந்த, மின்பிறப்பாக்க உரிமம் ஒன்றை வைத்திருக்கும் ஒருவருக்கு விநியோகிப்பு உரிமம் ஒன்று வழங்கப்படுதலாகாது.

(ஆ) நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல், தனியொரு கம்பெனியின் பங்குகளினது ஐந்து சதவீதத்திற்கு மேற்பட்டதை வைத்திருக்கின்ற, இலங்கை அரசாங்கம் தவிர்ந்த, விநியோகிப்பு உரிமம் ஒன்றை வைத்திருக்கும் ஒருவருக்கு மின்பிறப்பாக்க உரிமம் ஒன்று வழங்கப்படுதலாகாது.

(இ) நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல், தனியொரு கம்பெனியின் பங்குகளினது ஐந்து சதவீதத்திற்கு மேற்பட்டதை வைத்திருக்கின்ற, இலங்கை அரசாங்கம் தவிர்ந்த, ஆளொருவருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விநியோகிப்பு உரிமம் வழங்கப்படுதலாகாது.

(ஈ) இலங்கை அரசாங்கம் தவிர்ந்த எவரேனுமாள் அல்லது கம்பெனி, பின்வரும் உரிமங்களின் இணைப்பொன்று வழங்கப்பட்டுள்ள இரு கம்பெனிகளின் பங்குகளினது ஐந்து சதவீதத்துக்கு மேற்பட்டதை, நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல், ஒரே நேரத்தில் வைத்திருத் தலாகாது:-

(i) ஒரு மின்பிறப்பாக்க உரிமமும் ஒரு விநியோகிப்பு உரிமமும்; அல்லது

(ii) ஒன்றுக்கு மேற்பட்ட விநியோகிப்பு உரிமங்கள்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவைத் திருத்துதல்

**16.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) "மின்பிறப்பாக்கல் உரிமம்பெற்றவர் ஒருவர் பின்வருவனவற்றுக்கு உரித்துடையவராதல்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "மின்பிறப்பாக்கல் உரிமம்பெற்றவர் ஒருவர் பின்வருவனவற்றைச் செய்தல்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (எ) என்னும் பந்தியில், "தேசிய முறைமைத் தொழிற்படுத்துநர் உரிமம்பெற்றவருடனும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தேசிய முறைமைத் தொழிற்படுத்துநருடனும்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவைத் திருத்துதல்

**17.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவு, (1) ஆம் உட்பிரிவில் "மின்பிறப்பாக்கத்திலும் மின் விநியோகிப்பதிலும் ஈடுபடுமிடத்தும், அவ்வாறு பிறப்பிக்கப் பட்ட மின்சாரத்தின் கொள்ளளவு அல்லது தொகையானது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "மின்பிறப்பாக்கத்திலும் மின் விநியோகிப்பதிலும் அல்லது மின்வழங்குகையிலும் ஈடுபடுமிடத்தும், அவ்வாறு பிறப்பிக்கப்பட்ட, விநியோகிக்கப் பட்ட அல்லது மின்வழங்கப்பட்ட மின்சாரத்தின் கொள்ளளவு அல்லது தொகையானது" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவைத் திருத்துதல்

**18.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில்-

(அ) "தேசியக் காப்புவரிக் கொள்கைக்கிணங்க" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தேசியக் காப்புவரிக் கொள்கைக்கிணங்க, நிதியமைச்சரின் கலந்தாலோசனையுடன்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(ஆ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், "தேசிய முறைமைத் தொழிற்படுத்துநருக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தேசிய முறைமைத் தொழிற்படுத்துநருக்கும் விநியோகிப்பு உரிமம் பெற்றவர்களுக்கும்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவுக்கான காப்பு வாசகத்தில், "பாகம் IX இன் நியதிகளின்படி" மற்றும் "மொத்த விற்பனை மின்சாரச் சந்தை" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, முறையே "30 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியின் நியதிகளின்படி" மற்றும் "போட்டியுள்ள மொத்த விற்பனை மின்சாரச் சந்தை" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவைத் திருத்துதல்

**19.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "மொத்த விற்பனை மின்சாரச் சந்தை எந்தேதியிலிருந்து தொழிற்பாடுகளைத் தொடங்க வேண்டுமோ அத்தேதியைக்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "(2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஒவ்வொரு மின்சாரச் சந்தையும் எத்தேதிகளிலிருந்து தொழிற்பாடுகளைத் தொடங்க வேண்டுமோ அத்தேதிகளைக்" என்னும் சொற்களையும் எண்ணையும் இடுவதன்மூலமும்;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும்:-

"(2)(அ) தேசிய மின்சாரச் சந்தையானது போட்டியுள்ளவொரு சந்தையாக விருத்தல் வேண்டுமென்பதுடன் அதன் தொழிற்பாட்டில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடவடிக்கைமுறைகள் விதித்துரைக்கப்பட்டவாறாக இருத்தலும் வேண்டும்.

(ஆ) தேசிய மின்சாரச் சந்தையானது பின்வருவனவற்றுள் ஏதேனுமொன்றை அல்லது பின்வருவனவற்றுள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவற்றின் இணையொன்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்:-

(i) தேசிய முறைமைத் தொழிற் படுத்துநரின் எதிர்வரும் நாளினதும் அதேநாளினதும் தேவைப்பாடுகளின் குறுகிய கால மின்சக்திப் பெறுகையை வசதிப்படுத்தும் போட்டியுள்ள வொரு மொத்த மின்சார உடனொப்பமைப்புச் சந்தை;

(ii) மின்பிறப்பாக்கல் உரிமம் பெற்றோருக்கும் மின்விநி யோகிப்பு உரிமம் பெற்றோருக்கும் இடையே யான நீண்டகால மின்சார விநியோக ஒப்பந்தங்களின் வணிகத்தை வசதிப்படுத்தும் போட்டியுள்ளவொரு மொத்த மின்சாரச் சந்தை;

(iii) தேசிய முறைமைத் தொழிற் படுத்துநருக்கான அடிக்கடியான கட்டுப்பாட்டுத் துணைநிலைச் சேவைகள், எதிர்வினை மின் சக்தித் துணைநிலைச்சேவைகள் மற்றும் மீள்தொழிற்படு தகை மைக்கான ஆதரவுச் சேவைகள் என்பவற்றை உள்ளடக்குகின்ற போட்டியுள்ளவொரு துணை நிலைச் சேவைகள் சந்தை; அத்துடன்

(iv) சில்லறை மின்சாரச் சந்தை.”;

(3) அப்பிரிவின் உட்பிரிவு (3) ஐ உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலமும்:-

"(3அ) இவ்வுட்பிரிவு நடைமுறைக்கு வருவதன் மேல் அமைச்சர், தேசிய மின்சாரச் சந்தையைத் தொழிற்படுத்துவதற்கு தேசிய முறைமைத் தொழிற்படுத்துநரை இயலச் செய்யும் நோக்குடன், தேசிய மின்சார சந்தையின் வினைத்திறனான தொழிற்பாட்டை வசதிப்படுத்துவதற்கு அவசியமாகவுள்ள தேவைப்படுத்தப்படும் நியதிநிபந்தனைகள் உள்ளடங்கலாக நடைமுறைப்படுத்தற் கால வரையறையுடன் கூடிய சந்தை மாதிரிகளை, நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்றாண்டு களுக்குப் பிந்தாமல், வகுத்தமைக்கும்படி தேசிய முறைமைத் தொழிற்படுத்துநருக்குக் கட்டளையிடுதல் வேண்டும்."; அத்துடன்

(4) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில், "மொத்த விற்பனை மின்சாரச் சந்தை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "29 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (அ) எனும் பந்தியின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி விதித்துரைக்கப்பட்ட காப்பு வரியுடன் இடைத் தொடர்புக் கொள்ளளவு 10 மெகாவோட்டுக்களை விஞ்சாதிருக்கவேண்டிய தேசிய மின்சாரச்சந்தை" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 40 ஆம் பிரிவைத் திருத்துதல்

**20.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 40 ஆம் பிரிவு "இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அல்லது அவை தொடர்பாக ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "இச்சட்டத்தின் ஏற்பாடுகள் எந்த ஆள் அல்லது எவ்வாட்களின் குழு தொடர்பாக ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டுமோ அல்லது அவ்வாட்களின் குழுவுக்கு ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 52 ஆம் பிரிவைத் திருத்துதல்

**21.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 52 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் "அமைச்சர்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும்:-

""இலங்கையின் தேசிய வலுசக்திக் கொள்கை மற்றும் உத்திகள்" என்பது, 2019 ஒகத்து 9 ஆந் தேதிய 2135/61 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியிலும்

வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அதன் அடுத்துப்பின்னரான மீளாய்வுகள் மற்றும் நாளதுவரையாக்கல்களும் வெளியிடப்பட்ட இலங்கையின் தேசிய வலுசக்திக் கொள்கை மற்றும் உத்திகள் எனப் பொருள்படும்;"; அத்துடன்

(2) அப்பிரிவின் "பிராந்திய மின்கடத்துகை வலையமைப்பு" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும்:-

""பாதுகாப்பு தடைசெய்யப்பட்ட சிக்கனமான அனுப்புகை" என்பது, மின்பிறப்பாக்கி இயலுமைகள், குறைந்தபட்ச மற்றும் கூடியபட்ச வெளியீட்டு மட்டங்கள், சாய்வு விகிதங்கள், ஒதுக்குகைத் தேவைப்பாடுகள், மின்கடத்துகை இணைப்பு வரையறைகள், மின்வலியளவு வரையறைகள் மற்றும் நிலைத்தன்மை வரையறைகள் போன்ற மின்சார மின்சக்தி முறைமையின் வலையமைப்பு நிலைத்தன்மை, நம்பகத்தன்மை மற்றும் பாதுகாப்பு என்பவற்றின் நியதிகளுக்கமைய எல்லா முறைமைத் தொழிற்பாட்டு வரையறைகளும் மதிக்கப்படுவதை உறுதிப்படுத்தி மின்சாரத் தேவையைப் பூர்த்திசெய்வதற்கு கிடைக்கக் கூடியனவாகவுள்ள மின் பிறப்பாக்க அலகுகளின் மிகவும் செலவுகுறைந்த உகந்ததான ஒதுக்கீட்டைத் தீர்மானிக்கின்ற செயல்முறையெனப் பொருள்படும்;".

முதன்மைச் சட்டவாக்கத்தின் அட்டவணை I ஐத் திருத்துதல்

**22.** முதன்மைச் சட்டவாக்கத்தின் அட்டவணை I இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வட்டவணையின் (அ) என்னும் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன்மூலமும்:-

"(அ) பின்வருவன தொடர்பில் முதனிலைக் கைமாற்றல் திட்டத்தில் குறிப்பீடு செய்யப்பட்டவாறாக இலங்கை மின்சார சபையின் சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் பணிகளைக் கையேற்பதற்கு அதன் பங்குகளில் நூறு சதவீதம் திறைசேரிச் செயலாளரினால் வைத்திருக்கப்படும்

(இதனகத்துப்பின்னர் “மின்பிறப்பாக்கக் கம்பெனி” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) கம்பெனியொன்று-

(i) நீர்மின்சக்தி மின்பிறப்பாக்கம்;

(ii) நுரைச்சோலை லக்விஜய நிலக்கரி மின்சக்திப் பொறித்தொகுதி மற்றும் வரையறுக்கப்பட்ட லங்கா நிலக்கரி (தனியார்) கம்பெனி;

(iii) நிலக்கரி மின்சக்தி மின்பிறப்பாக்கம் தவிர்ந்த வெப்பஞ்சார் மின்சக்தி மின்பிறப்பாக்கம்;

(iv) மன்னார் தம்பபவனி காற்றாலை மின்சக்திப் பொறித்தொகுதி; அத்துடன்

(v) திருகோணமலை மின்சக்தி கம்பெனி லிமிடெட்;”;

(2) அவ்வட்டவணையின் (ஆ), (இ) மற்றும் (ஈ) என்னும் விடயங்களை நீக்குவதன்மூலமும்;

(3) அவ்வட்டவணையின் (உ) என்னும் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன்மூலமும்:-

“(உ) பின்வருவன தொடர்பில் முதனிலைக் கைமாற்றல் திட்டத்தில் குறிப்பீடு செய்யப்பட்டவாறாக இலங்கை மின்சார சபையின் சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் பணிகளைக் கையேற்பதற்கு அதன் பங்குகளில் நூறு சதவீதம் திறைசேரிச் செயலாளரினால் வைத்திருக்கப்படும் கம்பெனியொன்று-

(i) இலங்கையின் தேசிய மின் கட்டமைப்பை அமைக்கின்ற பௌதிக உட் கட்டமைப்பின் அபிவிருத்தி, பேணுகை மற்றும் தொழிற்பாடு;

(ii) வேறு தெரிவுசெய்யப்பட்ட சொத்துக்கள், பணிகள் மற்றும் செயற்பாடுகள்; அத்துடன்

(iii) எல்ரீஎல் ஹோல்டிங்ஸ் லிமிடெட் மற்றும் ஸ்ரீலங்கா எனர்ஜீஸ் (பீவிரி) லிமிடெட்;";

(4) அவ்வட்டணையின் (எ) என்னும் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன்மூலமும்:-

"(எ) பின்வருவன தொடர்பில் முதனிலைக் கைமாற்றல் திட்டத்தில் குறிப்பீடு செய்யப் பட்டவாறாக இலங்கை மின்சார சபையின் சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் பணிகளைக் கையேற்பதற்கு அதன் பங்குகளில் நூறு சதவீதம் திறைசேரிச் செயலாளரினால் வைத்திருக்கப்படும் (இதனகத்துப்பின்னர் "மின் விநியோகிப்புக் கம்பெனி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கம்பெனியொன்று-

(i) மின்விநியோகிப்புப் பிரிவுகள், அதாவது பிரிவு 1, பிரிவு 2, பிரிவு 3 மற்றும் பிரிவு 4;

(ii) தெரிவுசெய்யப்பட்ட வேறு சொத்துக்கள், பணிகள் மற்றும் செயற்பாடுகள்; அத்துடன்

(iii) லங்கா எலக்ரிசிட்டி கம்பெனி (பிறைவேட்) லிமிடெட்;";

(5) அவ்வட்டவணையின் (ஏ) எனும் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயத்தைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(ஐ) (i) இறுதிக் கைமாற்றல் திட்டத்தில் குறிப்பீடு செய்யப்பட்டவாறாக, மின்பிறப்பாக்கக் கம்பெனியின் மின்பிறப்பாக்கல் பணி களைக் கையேற்பதற்கான அத்தகைய எண்ணிக்கையினவான கம்பெனிகள்;

(ii) இறுதிக் கைமாற்றல் திட்டத்தில் குறிப்பீடு செய்யப்பட்டவாறாக, மின்விநியோகிப்புக் கம்பெனியின் மின்விநியோகிப்புப் பிரிவுகளின் பணி களைக் கையேற்பதற்கான அத்தகைய எண்ணிக்கையினவான கம்பெனிகள்.".

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**23.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கு இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம்,
இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்